15

கருக்கம்

பள்ளிக் கல்வி – மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகள் ஏற்கனவே அனுமதி, அங்கீகாரம் பெற்று செயல்பட்டு வரும் மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளின் நிர்வாகங்கட்கு குறைந்தபட்ச நிலப்பரப்பு தேவையை பூர்த்தி செய்ய ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசத்திற்கு மேலும் மூன்றாண்டு கால அவகாசம் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (எக்ஸ்.2) துறை

அரசாணை (நிலை) எண்: 238 நாள்: 26.11.2008

பார்வை:

(1) அரசாணை (2D) எண் 48, பள்ளிக் கல்வி(எக்ஸ்.2)துறை, நாள் 21.7.04.
(2) மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண் 4732/அ1/08 நாள் 19.9.08.

–

ஆணை:

பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் மெட்ரிகுலேசன்/ மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகட்கு அங்கீகாரம் வழங்குவதற்குத் தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை வரையறுக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வரசாணையில் பள்ளிகட்கான குறைந்தபட்ச நிலப்பரப்பினைப் பொறுத்தவரை பள்ளிகள் அமைந்துள்ள பகுதிகளின் தன்மைக்கேற்ப பரப்பளவு கீழ்க்குறித்தவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மாநகராட்சி பகுதி | : | 6 மனையிடம் |
| மாவட்டத் தலைநகரம் | : | 8 மனையிடம் |
| நகராட்சி | : | 10 மனையிடம் |
| பேரூராட்சி | : | 1 ஏக்கர் |
| ஊராட்சிப் பகுதி | : | 3 ஏக்கர் |

மேலும் மேற்குறித்தவாறு நிலப்பரப்பிற்கான குறைந்தபட்ச தேவையைப் பூர்த்தி செய்யாத பள்ளி நிர்வாகங்களுக்கு நிலத்திற்கான விலை மிக உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு மேற்படி நிபந்தனையை நிறைவேற்ற மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் கால அவகாசமும் மேற்காணும் அரசாணையில் அளிக்கப்பட்டுள்ளது.

2. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் பார்வை 2–ல் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் பல மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி நிர்வாகங்கள் குறைந்தபட்ச நிலப்பரப்பு தேவையை இன்னும் பூர்த்தி செய்யாத நிலை உள்ளது எனவும் இதற்குக் கீழ்க்குறித்த காரணங்களை பள்ளி நிர்வாகங்கள் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்:–

(1) பள்ளியில் அமைவிடத்தையொட்டி கூடுதல் நிலப்பரப்பு வாங்க இயலாத நிலை. காலியிடம் இல்லாததால் குறைந்தபட்ச தேவையைப் பூர்த்தி செய்ய இயலவில்லை.
(2) மாநகராட்சி பகுதியிலும், நன்கு வளர்ச்சி அடைந்துவரும் பகுதிகளிலும், கூடுதல் நிலப்பரப்பு வாங்க இயலாத அளவிற்கு நிலத்தின் விலை பன்மடங்கு உயர்ந்துள்ளது குத்தகையாக பெறுவதற்கும் வாய்ப்பு இல்லாத நிலை உள்ளது.

புதிதாக துவக்க அனுமதி கோரும் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு குறைந்தபட்சமாக நிர்ணயிக்கப்பட்ட நிலப்பரப்பை ஏற்படுத்தாத நிலையில் துவக்க அனுமதி வழங்கப்படுவதில்லை என்றாலும் இருப்பினும், துறையின் அனுமதி பெற்று துவக்கப்பட்டு பல ஆண்டுகளாக செயல்பட்டு வரும் பள்ளிகள் குறைந்தபட்ச நிலப்பரப்பு தேவையைப் பூர்த்தி செய்யாத நிலையில் தொடர்ந்து தற்காலிக அங்கீகாரம் வழங்குவதில் இடர்பாடுகள் ஏற்படுகிறது என்றும் இந்நிலை தொடருமானால் அங்கீகாரம் பெறாமல், தொடர்ந்து செயல்பட்டு வரும் பள்ளிகளால் முன்னிலைப்படுத்தப்படும் மாணாக்கரை அரசு பொதுத் தேர்வுகட்கும் அனுமதிக்க இயலாத நிலை ஏற்படும் என்பதுடன் கிழ்நிலை வகுப்பு மாணாக்கருக்கும் இத்தகைய பள்ளிகளால் வழங்கப்படும் மாற்றுச் சான்றுகளும் தகுதியற்றதாக கருத வேண்டிய நிலையும் ஏற்படும் என்றும், எனவே மாணாக்கரின் கல்வி நலன் மற்றும் பள்ளி நிர்வாகங்களால் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்குறித்த காரணங்களை கருத்தில் கொண்டு ஏற்கனவே துறை அனுமதி / அங்கீகாரம் பெற்று தொடர்ந்து செயல்பட்டு வரும் பழைய மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி நிர்வாகங்கட்கு குறைந்தபட்ச நிலப்பரப்பு தேவையைப் பூர்த்தி செய்ய மேலும் மூன்றாண்டுகட்குக் கால அவகாசம் அளிக்க ஆணை வழங்குமாறு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் அரசினை வேண்டியிருந்தார்.

3. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. மாணாக்கரின் கல்வி நலன் மற்றும் பள்ளி நிர்வாகங்களால் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களை கருத்தில் கொண்டு ஏற்கனவே துறை அனுமதி / அங்கீகாரம் பெற்று தொடர்ந்து செயல்பட்டு வரும் பழைய மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி நிர்வாகங்கட்கு குறைந்தபட்ச நிலப்பரப்பு தேவையை பூர்த்தி செய்ய ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவுற்ற நிலையில் மேலும் மூன்றாண்டுகட்கு கால அவகாசம் அளித்து ஆணை வழங்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

1.12.08